மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | STC 140/22 |
| பெயர் | : | ஆழ்வார் (PW 1) |
| த/பெ. | : | வெள்ளையன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(Accused Perumalsamy is absent. Petition filed U/s.317 crpc and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18 th day of January 2024

**முதல் விசாரணை**

1) நான் புதியம்புத்தூரில் வசிக்கிறேன். நான் முடி திருத்தும் வேலை செய்கிறேன். சாட்சி கருப்பசாமி என் மகன்.

2)06.10.2019 ம் தேதி அன்று இரவில் புதுப்பச்சேரியில் டாஸ்மார்க் கடையில் மது அருந்திவிட்டு புதுப்பச்சேரியில் ஒட்டியுள்ள ரோட்டில் மேற்காக சென்று கொண்டிருந்த போது ஒரு இரு சக்கர வாகனம் மேற்கிலிருந்து கிழக்காக வந்து என் மீது மோதி விட்டது. அதில் எனக்கு வலது கால், இடது பிட்டியில் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது.என் மீது பைக் மோதியதும் நான் நிதானம் இழந்து விட்டதால் எனக்கு இரு சக்கரவாகனத்தின் பதிவுஎண் தெரியாது.

3) எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். போலீசார்கள் அங்கு வந்தார்கள்.என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் இருக்கும் கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார்வாக்குமூலம் நான் கொடுத்தது தான்.**(மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா. ஆவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எதிரி பெருமாள்சாமியை தெரியும்.போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என் மனைவி பெயர் மதியம்மாள். சாட்சி ஜோசப் மோகன் யார் என்று தெரியாது.எதிரி பெருமாள்சாமியை சம்பவத்திற்கு முன்பாக நான் பார்த்ததில்லை.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து கிழக்கு நோக்கி தான் என்னுடைய வீட்டுக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான்.ஆனால் நான் மது அருந்திவிட்டு மேற்கு நோக்கி சென்றுவிட்டேன் என்றால் இருட்டில் அவ்வாறு சென்றுவிட்டேன்.

2) நான் போலீசார் விசாரணையில் டாஸ்மார்க் கடையில் மது அருந்திவிட்டு வீட்டிற்கு கிழக்கு பக்கம் பார்த்து செல்லாமல் மது அருந்தியதாலும் இருட்டினாலும் மேற்கு நோக்கி சென்றுவிட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3) எதிரி பெருமாள்சாமி பெயர் மற்றும் முகவரி என்றைய தினத்தில் எனக்கு தெரியும் என்றால் இன்று தான் தெரியும். விபத்து நடந்தவுடன் நான் சுயநினைவு இழந்துவிட்டேன்.என்னை யார் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்று எனக்கு தெரியாது.

4) எதிரி பெருமாள்சாமியை பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்ட இயலாது. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விபத்து நடந்ததாக சொன்னதும் உண்மையல்ல என்றால் சரியல்ல.நான் இழப்பீடு பெற வேண்டுமென்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.